வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 23.11.2024 சனிக்கிழமை | இதழ் : 327 | பக்கங்கள் : 12

# இடர் நிலை ஏற்பட்டால் எதிர்கொள்ள வடக்கு மாகாணம் தயார் நிலையில்!

## அனர்த்த முன்னாயத்த கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவம்பர் 23**

**எதிர்வரும் நாட்களில் வடக்கு மாகாணத்தில் இடர் பாதிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாக துறைசார் திணைக்களத் தலைவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்தனர்.**



பருவகால மழை மற்றும் இடர்தணிப்பு முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு ஆளுநர், எதிர்வரும் நாள்களில் தாழமுக்கம் ஒன்று வங்கக் கடலில் உருவாகலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதன் நகர்வுப் பாதை சரியாக இன்னமும் கணிக்கப்படவில்லை யாயினும், நாம் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும்.

பருவமழை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் - செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னதாக, எமது பிரதேசத்திலுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் துப்பரவாக்கப்பட்டிருக்கவேண்டும். சில இடங்களில் வாய்க்கால்களை சட்டவிரோதமாக

11



## யாழில் மழை வெள்ளத்தால் 1,492 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 1492 குடும்பங்களை சேர்ந்த 5591 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 21 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனைத்து முகாமைத்துவப் பிரிவின் பிரதி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில்

11

## சீன அரசாங்கத்தின் 1996 வீட்டுத் திட்டம்

### ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, நவ. 23

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் சீன அரசாங்கத்தின் 552 மில்லியன் சீன யுவான் நிதியுதவியின் கீழ் 1,888 வீடுகள் மற்றும் 108 மூத்த கலைஞர்களுக்கான வீடுகள் ஆகிய வீட்டுத்திட்டத்தின் இணை ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கியூ

11

## அர்ச்சுனாவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு!

கொழும்பு, நவ. 23

புதிய பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சிவில் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

அவர் பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட அறிவிப்பு ஒன்று தொடர்பில் விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்காக சிவில் செயற்பாட்டாளர்கள் இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளனர்.

11

## மன்னிப்பு கோரவேண்டும் அநுர!

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மக்கள் விடுதலை முன்னணியினரே நாட்டில்

11

## தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கு ஜனாதிபதி இடமளிக்கக்கூடாது

### தேசிய சுதந்திர முன்னணி கோருகிறது

கொழும்பு, நவ. 23

தமிழ் பிரிவினைவாதிகளின் கோரிக்கைகளுக்கும், நிகழ்ச்சி நிரலுக்கும் ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தியும் இடமளிக்கக்கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இனவாதம், மதவாதத்துக்கு எதிரானதே இந்த

11

## என் மீதான விசாரணை அரசியல் பழிவாங்கல்!

### பிள்ளையான் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 23

2019 ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான பிரித்தானிய ஊடகமான சனல் 4 இன் ஆவணப்படம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தமக்கு எதிராக மேற்கொண்ட விசாரணைகள் அரசியல் பழிவாங்கல் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த

11



## அரசமைப்பு எப்படி இருந்தாலும் மக்களின் அதிகாரமே பலமானது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் எத்தகைய சட்ட ஒழுங்குகள் இருந்தாலும் மக்களின் அதிகாரம் தான் பலமாக உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணைகளின் கட்டமைப்பு மற்றும் வடிவங்களைப் பார்க்கும்போது அவர்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கின்றன என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை அலைக்கழிக்காமல் தேவைகளை நிறைவேற்றுவது அரச அதிகாரிகள் கடமை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிப்பது அரசாங்க அதிகாரிகள் கடமை என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப் பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபி விருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், அலுவலர்கள் பொது மக்களை தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் வகையில் செயற்படக்கூடாது என்றும், அரச அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ் வாறு செய்து முடிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் ஒவ்வொரு அலுவலகங்களும் வினைத்திறனாக பணியாற்றவேண்டும் என ஆளு நர் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் நீண்ட காலப் பிரச் னையான அவர்களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு மற்றும் 10 சதவீதக் கழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் எனச் சுட்டிக் காட்டிய ஆளுநர், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விவசாய உற்பத்திப் பொருள்களை சேகரிக்கக் கூடிய மையங்களை உருவாக்குவது தொடர்பிலும் ஆராயுமாறும் பணித்தார். அத்துடன் சந்தைகளில் பின்பற்றப்படும் கழிவு நடைமுறை தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழான வீடமைப்புத் திட்டத்தில், மீளக்குடியமரும் மக்கள், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் மக்கள், விதவைகளுக்கே முன்னுரிமையளிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

ஆளணிப்பற்றாக்குறை தொடர்பில் திணைக் களத் தலைவர்களால் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் மதிப்பீட்டாளர்களின் பற்றாக குறையை நிவர்த்திக்கும் வகையில் 75 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 17, 138 குடும்பங்களுக்கு காணி இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதைப் பூச்சியமாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநர் இங்கு குறிப்பிட்டார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் புதிய தலைவர் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட ஆளுநர், சட்டத்துக்கு முரணான வகையில் - தவறாகச் செயற்படும் பேருந்துகளின் உரிமங்களை உடனடியான இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பணித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநருடன், வடக்கு மாகாண பிரதம செயலா ளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவி ருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களினதும் உதவி ஆணையாளர்கள் மற்றும் துறைசார் திணைக் களத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# மழை காலங்களில் குடியிருப்புக்களுக்குள் கடல்நீர் புகுவதாக குருநகர் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம், குருநகர் தொடர்மாடி குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள இறால் வளர்ப்பு திட்ட பகுதியினர் நேற்று முன் தினம் பெய்த கடும் மழை காரணமாக, குடியிருப்புகளுக்குள் கடல் சீர் உட்புகுந்ததால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காலங்களில் இவ்வாறான நிலை தொடர்வதாகவும் குறித்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடல் அணை இல்லாத காரணத்தினால் கடல் தண்ணீர் வீடுகளுக்குள் வருவதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் வவுனியாவில்!



வவுனியா, நவ. 23

தேசியமக்கள் சக்தியின் வன்னி மாவட்டத் தலைமை அலுவலகம் வவுனியாவில் திறந்துவைக்கப்பட்டது.

வவுனியா கித்துல் வீதியில் குறித்த அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் குறித்த அலுவலகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அவர்களுக்கு வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

# கிளிநொச்சியில் மரபுசார் உணவு திருவிழா ஆரம்பம்

கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சியில் மரபுசார் உணவு திருவிழா நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

"மரபுசார் உணவு : மருந்தாகும் விருந்து" எனும் தொனிப் பொருளில் இது நேற்றும் இன்றும் நடைபெறவுள்ளதுடன்

பாரம்பரிய உணவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது பாரம்பரிய உணவுகளை உள்ளடக்கிய கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை தயாரிக்கும் முறைகளும் இடம் பெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையியின் பிரதிப் பணிப்பாளர் தயாளினி, கிளிநொச்சி மாவட்ட சித்த ஆதார வைத்தியசாலையியின் மருத்துவ அத்தியட்சகர் அரவிந்தன், கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தியான மண்டபத் திறப்பு விழா



யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அமரர் சரசரட்ணம் ஞாபகார்த்தமாக அவரது கணவர் கந்தையா புலந்திரலிங்கம் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக்கொடுத்த தியான மண்டபத் திறப்பு விழா கல் லூரி அதிபர் இ. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தின ராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் த. குகதாஸ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி செல்வநாயகி, கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளர் தயானந்தராசா, கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஓய்வுபெற்ற அதிபர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-02- 05)

# மன்னார் போராட்டத்தில் வன்முறையை தூண்டியவர்களைத் தேடும் பொலிஸார்!

மன்னார், நவ. 23

மன்னார் பொது வைத்தியசாலையில் இறந்த இளம் தாயின் மரணத்திற்கு நீதி கோரி கடந்த 20 ஆம் திகதி மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் அமைதியாக இடம் பெற்ற மக்கள் போராட்டத்தில் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தி வன்முறையை தூண்டும் விதமாகச் செயற்பட்ட நபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வைத்தியசாலைக்குள் நுழைந்து கண்ணாடிகளை சேதமாக்கியவர்கள், பொலிஸார் மீது கற்கள் வீசியவர்கள், ரயர்கள் உள்ளிட்ட பொருட்களை வீதிகளில் எரித்து மக்களின் போராட்டத்தை திசை திருப்பியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமெராக்கள் மற்றும் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட காணொளிகளை சேகரித்து அதன் ஊடாக அமைதியான போராட்டத்தை திசை திருப்பி வன்முறையைத் தூண்டியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களை கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# ஆசிரியர் கலாசாலையில் நாவலர் நினைவரங்கம்





யாழ்ப்பாணம், நவ. 23

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை ஒட்டிய நாவலர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் சிலை முன்றிலில் நேற்று வெள்ளிக் கிழமை காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்கள் நாவலரது வெவ்வேறு பணிகளை முன்னிலைப்படுத்தி உரையாற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கு பாலசண்முகன் நிறைவுரை ஆற்றினார். விஞ்ஞான நெறி ஆசிரியமாணவர் செந்தூர்ச்செல்வன் நன்றியுரை ஆற்றினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.11.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## இனவாதத்தின் வரையறை என்ன?

தேசிய மக்கள் சக்தியினர் கூட எதிர்பார்த்திராத வெற்றியொன்று அவர்களுக்கு கிட்டியிருக்கின்றது. இது உண்மையில் அவர்களுக்கு மகிழ்சியை கொடுத்திருக்குமா என்பதும் சந்தேகம்தான் - ஏனெனில் இப்போது அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளின் கைதியாகியிருக்கின்றனர். அவர்களால் சாதாரணமாக இதிலிருந்து தப்பிச் செல்ல முடியும்தான் ஆனால், அவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்தால், அவர்களும் முன்னைய ஆட்சியாளர்கள் போன்று பத்தோடு பதினொன்றுதான். அநுரகுமார அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பதை அவதானிப்பதில் தவறில்லை. பலரை அவதானித்து ஏமாந்து போன வரலாற்றைக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினம், இந்த அலையிலும் சிறிது காலம் மிதக்கட்டும் என்றுதான் தற்போதைக்கு சொல்லிவைக்க முடியும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது அக்கிராசன உரையில் - இனி இனவாதத்திற்கு இங்கு இடமில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார் - தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, வடக்கு மக்கள் இனவாதத்தை கைவிட்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார். அநுரவின் உரையிலும் அந்தத் தொனியே மேலோங்கியிருக்கின்றது. இங்கு நாம் கேட்க வேண்டிய கேள்வி, இனவாதத்திற்கான வரையறை என்ன? அதனை எவ்வாறு வரையறுப்பது?

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்னுமடிப்படையில் அவர்களுக்கான தனித்துவமான அரசியல் இருப்பைக் கோரி வருகின்றர். தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையைத்தான், ரில்வின் சில்வா இனவாதம் என்கின்றாரா? - தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு எதிராகத்தானா வடக்கு மக்கள் பெரும்பான்மையாக ஜே.வி.பிக்கு வாக்களித்திருக்கின்றனர்? இதற்கு முதலில் பதிலளித்திருக்க வேண்டியது வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் ஆனால் அவர்களோ வெற்றிக் களிப்பை விகாரைகளுக்குள் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். ரில்வின் சில்வாவின் கருத்தை தேசிய மக்கள் சக்தியில் எவருமே மறுதலிக்கவில்லை - அதுவே அநுரவின் அக்கிராசன உரையிலும் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் வரலாற்றில் மேற்கு சார்பான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில்தான், தமிழ் மக்களுக்கு எதிரான மோசமான இன ஒடுக்குமுறை அழித்தொழிப்பு நிகழ்ந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்குலக சார்பு, தாராளவாதப் பின்புலம் கொண்ட அவர்களுக்குள், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் உள்ளுறைவதை தடுக்க முடியவில்லை.

ஏனெனில், தென்னிலங்கை அரசியல் பாடசாலையில் படித்துத் தேறிய அனைவருமே இனவாதத்தை கூட்டியோ அல்லது குறைத்தோ - கடுமையாகவோ அல்லது மென்மையாகவோ பயன்படுத்துவதில் தேர்ச்சியுள்ளவர்களாக இருந்ததே இதுவரையான வரலாறு. இந்த வரலாற்றிற்கு மாற்றான எவ்வாறானதொரு ஆட்சியை அநுர வழங்கப் போகின்றார்? அதனை வழங்க அவர் முயற்சித்தால் அதற்கு தமிழ் மக்கள் உதவத்தான் வேண்டும். ஆனால், முதலில் அநுரகுமார தேசிய இனப்பிரச்னை ஒன்று நாட்டில் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும் - அதனை தீர்க்காமல் நாடு முன்னோக்கி பயணிக்க முடியாது என்னும் உண்மையை சிங்கள இளைஞர், யுவதிகளுக்குச் சொல்ல வேண்டும். விகாரைக்குள் உட்புகுத்த வேண்டும் - அவ்வாறில்லாது, நாம் எல்லோரும் இலங்கையர்கள், ஒரு தாய் பிள்ளைகள் என்னும் வசனங்கள் பிரச்னையை முடிமறைக்குமே தவிர ஒரு போதும் தீர்க்காது. பிரச்சினையை முடி மறைத்துக் கொண்டு ஐக்கியம் பற்றிப் பேசுவதும் ஒரு வகையான இனவாதம்தான்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



*"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"*

- கவிஞர் புதுவை இரத்தினதுரை.

# இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களைத் தடுங்கள்

## ஜனாதிபதிக்கு முல்லைத்தீவிலிருந்து தபாலட்டை அனுப்பி வைக்கப்பட்டது

முல்லைத்தீவு, நவ. 23

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை உடனடியாக தடுத்து நிறுத்தக் கோரி கையெழுத்திடப்பட்ட தபாலட்டைகள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு முல்லைத்தீவு மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 21 சர்வதேச மீனவர் தினம். இதனை முன்னிட்டு சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த தபாலட்டைகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மீனவர் தினத்தில் இலங்கை முழுவதுமாக விசேடமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினுடைய அத்துமீறல்களும், முல்லைத்தீவு கடற்பரப்பில் காணப்படுகின்ற கடற் திரவியங்கள் அனைத்தும் இந்திய இழுவை படகுகள் மூலமாக அபகரித்து செல்லுகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் சென்று பெரும் நஷ்டத்துடனே கரை திரும்புகின்றனர். அவர்களின் வாழ்க்கையை பெறும் இடம் பாடுகளுக்கு மத்தியிலேயே கழித்து வருகிறார் கள். இந்த நிலையில் முல்லைத்தீவு மக்கள், முல்லைத்தீவு மீனவர்களால் பெயர், முகவரி குறிப்பிட்டு கையெழுத்திடப்பட்ட தபாலட்டையை அனுப்பி வைக்கும் முகமாக 500இற்கும் மேற்பட்ட தபாலட்டைகள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.




இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்புக்குள் வரவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரியே இந்த தபாலட்டைகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(எ)

# இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு பெண் மருத்துவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், நவ. 23

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த நிலையில் விபத்துக்கு காரணமான பெண் மருத்துவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


கடந்த 29.10.2024 அன்று வட்டுக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். அராலி மத்தி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகேஸ்வரன் இராம்தாஸ் (வயது- 41) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையை இவ்வாறு உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து சங்கரத்தை பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் காரும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி இந்த விபத்து நிகழ்ந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இந்த நிலையில் அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதியான பெண் மருத்துவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். திடீர் பயணம் உண்டு. வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும்.

**இடபம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் தேடி வந்துப் பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**மிதுனம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் உதவுவார்கள். உறவினர், நண்பர்களால் நன்மை உண்டு. பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும். தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். யாரையும் பகைத்துக்கொள்ளாதீர்கள். வாகனம் தொந்தரவு தரும்.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. பழையகடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். எதிர்பார்த்த நல்ல செய்திவரும். பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். சிலர் நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**விருச்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலர் உங்களை நம்பிமுக்கிய பொறுப்புகளை ஒப்படைப் பார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம் பவங்கள் நினைவுக்கு வரும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். சகோதரர் வகையில் அலைச்சல் இருக்கும். அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்துபோகும். தாய்வழியில் மதிக் கப்படுவீர்கள். புதியவர்கள் நண்பர்களா வார்கள். வெளிவட்டாரத்தில் தொடர்புகள் விரிவடையும்.

**கும்பம்**
சமயோசிதமாகவும் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். சொத்து வாங்குவது விற்பதுலாபகரமாக முடியும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மீனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். உதவிகள் கிடைக்கும்.


# வவுனியாவில் மோட்டார் செல் மீட்பு!

வவுனியா, நவ. 23

வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் செல் ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் இருந்தே குறித்த செல் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், மோட்டார் செல்லை செயலிழகச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (எ)




# ஹெரோயின் வழக்கில் கைதான நபர் வவுனியா மேல் நீதிமன்றால் விடுதலை

வவுனியா , நவ. 23

ஹெரோயின் வழக்கில் கைது செய்யப்பட்டவருக்கு எதிரான குற்றத்தை நிரூபிக்கத் தவறியமையால் சந்தேக நபரை விடுவித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

1984 ஆண்டு 13 ஆம் இலக்க நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்ட நச்சு வகைகள் அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் கட்டளை சட்டத்தின் கீழ் போதைப்பொருள் சட்டத்தின் 54 அ (ஆ) பிரிவு போன்ற குற்றங்களுக்காக தீங்கு விளைவிக்கும் ஹெரோயின் 16 கிராம் 40 மில்லி கிராம் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் உடைமையில் வைத்திருந்து வியாபாரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியமையால் குற்றமற்றவர் என தெரிவித்து நீதிபதி இளஞ்செழியனால் விடுவிக்கப்பட்டார்.

வவுனியா தரணிக்குளம் காத்தார் சின்னக்குளத்தை சேர்ந்த நபரே இவ்வாறு விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு வவுனியா போதைத் தடுப்பு பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் வவுனியா நீதிவான் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பிணை விண்ணப்பம் கோரப்பட்ட போதும் பிணை நிராகரிக்கப்பட்டது. பிணை வழங்கும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றத்துக்கு இல்லை என்பதாலும் உயர் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய பிணை விண்ணப்பம் என்பதாலும் பிணை நிராகரிக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை இடம்பெற்று பின்பு இரசாயன பகுப்பாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்கள ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது.

குறித்த நபருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் நிறைவுபெற்று 2022. 10. 20 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தால் இரண்டு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. 10 கிராம் 0.6 மில்லிகிராம் அளவினைக் கொண்ட ஹெரோயினை தன் உடைமையில் வைத்திருந்தார் மற்றும் உடைமையில் வைத்து வியாபாரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் மன்று கேட்ட திற்கமைய குறித்த நபர் தான் குற்றவாளி இல்லை என்று மன்றுக்கு தெரிவித்தார்.

இதற்கமைய தீர்ப்பை அறிவித்த மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், எதிரியை குற்றமற்றவர் என விடுவித்து தீர்ப்பளித்தார். (எ)

# மருத்துவமனை மரணங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்த வேண்டும்

## காதர் மஸ்தான் எம். பி. கோரிக்கை

மன்னார், நவ. 23

மன்னார் பொது மருத்துவமனையில் பிரசவத்தின் போது மரணித்த தாய் மற்றும் சிசு தொடர்பில் உரிய விசாரணையை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதுடன் மன்னார் பொது மருத்துவமனை தொடர்பில் மக்கள் கொண்டிருக்கும் அச்சத்தைப் போக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான அசாதாரண சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன் மக்களுக்கு உயரியதும் பாதுகாப்பானதுமான சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் மருத்துவமனையில் அண்மைக்காலமாக பிரசவத்துக்கு சேர்க்கப்பட்ட தாய்மார் இறந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளமை கவலையளிக்கிறது.

நோயாளர்கள் தங்களது மருத்துவ தேவைகளுக்காக மருத்துவமனைக்கு செல்வதற்கு அச்சமடைந்திருப்பதாகவும் அறிய முடிகிறது.

நடந்த சம்பவம் தொடர்பாக குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் மஸ்தான் குறிப்பிட்டுள்ளார். (எ)

# “தவறிழைத்தவர்களுக்குத் தண்டனையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் வழங்குக”

மன்னார், நவ. 23

மன்னாரில் உயிரிழந்த தாய், சிசுவின் மரணத்துக்கான உண்மையான காரணங்கள் கண்டறியப்பட்டு, தவறுகள் நடைபெற்றிருக்குமாயின் தவறிழைத்தவர்களுக்குத் தண்டனையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் தெரிவித்தார்.

மருத்துவத் தவறுகளால் எம்மவர்களின் உயிர்கள் அநியாயமாகக் காவுகொள்ளப்படுவதை சகித்துக்கொள்ள முடியாது. எனவே, உரிய தரப்பினர் விரைந்து இதற்கு சரியான ஒரு தீர்வை வழங்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மக்கள் ஆணைக்கு எதிராக செயல்படுகிறது அனுர அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 23

**மக்களை அழுத்தங்களுக்கு ஆளாக்கும் கடந்த அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தையே தற்போதைய அரசாங்கமும் முன்னெடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கம் தேர்தல் மேடைகளில் முன்வைத்த சில விடயங்கள் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களோடு ஒப்பிடும் போது முரண்பாட்டை காண்பிக்கின்றன.

இணக்கப்பாடு காணப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை மாற்றி புதிய ஒப்பந்தத்தை எட்டுவதாக தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தல் மேடைகளில் பிரஸ்தாபித்தனர்.

ஆனால் அரசு தற்போது அதில் இருந்து விலகி செயல்பட்டு வருகிறது. இது பாரதூரமான விடயம் அத்துடன், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பின்பற்றிய செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கமும் பின்பற்றி வருவதாகத் தெரிகிறது.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையினருக்கு பல்வேறு ஏற்றுமதி சந்தைகளில் சிக்கல்கள் இருந்தாலும், அவற்றை நீக்குவதற்கு ஏற்றாற்போலான இணக்கப்பாட்டை நாம் காண்போம் என தெரிவித்திருந்தோம். இத அரசாங்கமும் மேற்குறித்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நாம் இந்த அரசாங்கத்திற்கு எமது ஆதரவை நல்குவோம்-என்றார். (அ)

# தோட்ட மக்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, நவ. 23

பெருந்தோட்ட மக்கள் 200 வருட காலம் அனுபவித்து வந்த பிரச்னைகளுக்கு இந்த அரசாங்கத்தில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படு மெனவும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னைக்கும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படு மெனவும் பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சராக பதவியேற்றுக் கொண்ட சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

பத்தரமுல்லை செத்சிறிபாயவிலுள்ள அமைச்சுக் காரியாலயத்தில் தனது பிரதியமைச்சுக் கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக உரிய ஆவணத்தில் கையெழுத்திட்டு பொறுப்பேற்றுக் கொண்டதுடன், ஆவணத்தை அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி தொழிலமைச்சர் மஹிந்த ஜெயசிங்க, அமைச்சின் அதிகாரிகள், ஊழியர்கள், பிரதியமைச்சரின் குடும்பத்தினர், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# கடலோர ரயில் சேவை தாமதம்

கொழும்பு, நவ. 23

ரயில் ஒன்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடலோர ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டது.

காலியில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலிலேயே இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

இதனால், காலை நேரத்தில் இயக்கப்படும் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# வியட்நாம் பெண்கள் கைது!

கொழும்பு, நவ. 23

வாடிக்கையாளர்களிடம் இருந்து 35,000 ரூபாய் முதல் 50,000 வரை கட்டணம் வசூலித்து, கொழும்பில் சமூகப் பிறழ்வான முறையில் இயங்கிய இரண்டு விடுதிகளை நடத்திய வியட்நாமியப் பெண்கள் குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினர் இந்த கைது நடவடிக்கையை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இதன்படி, பம்பலப்பிட்டியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வோர்ட் பிளேஸில் உள்ள வீடு ஆகியவற்றில் இருந்து, குடிவரவு திணைக்களத்தினர், ஏழு பெண்கள் உட்பட ஒன்பது வியட்நாம் நாட்டவர்களை கைது செய்தனர்.

சமூக ஊடகங்கள் ஊடாக மிகவும் இரகசியமான முறையில் நடத்தப்படும் விடுதியொன்றைப் பற்றி அறிந்து கொண்டு, பம்பலப்பிட்டியில் உள்ள இடத்துக்கு செல்ல இரகசிய திட்டத்தை பயன்படுத்தியதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், குறித்த வெளிநாட்டவர்களும் கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி சுற்றுலா விசாவில் இலங்கை வந்ததாகவும், நாட்டில் தங்கி சட்டவிரோத வியாபாரத்தை நடத்துவதற்கு மூன்று மாதங்களுக்கு தமது விஸாவை நீடித்துக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

குறித்த தவறான நடத்தையில் ஈடுபடும் விடுதியின் உரிமையாளரான மற்றொரு வியட்நாமிய நபர் டுபாயில் இருந்து இயங்கி வந்ததும், கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர் குழுவினரும் டுபாயிலிருந்து வந்தவர்கள் என்பதும் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. (அ)

# பழமையான மரங்களை வெட்டுவதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடிவு

கொழும்பு, நவ. 23

நுவரெலியாவில் பழமையான மரங்களை வெட்டுவதற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானம் எடுக்கப்பட்டள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.ஏ.பீ.தலன்சூரிய தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்-

ஆசிய நாட்டில் அனைவரும் ஈர்க்க கூடிய வகையில் இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் மலையக பிரதேசங்களை சுற்றுலா பயணிகள் விரும்பதக்க பிரதேசமாகவும், சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வகையிலும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளாமல் நுவரெலியா கோல்ப் மைதானத்தில் மிகப் பழமையான 31 மரங்களை அழிக்க முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக முறையான விசாரணைகள் மேற்கொண்டு வழக்கு தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான குறித்த வளாகம் கோல்ப் ஹோட்டலுக்கு குத்தகை முறையில் வழங்கப்பட்டுள்ளது எனினும் குறித்த பகுதியில் உள்ள மரங்களை அகற்றி புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் ,மரங்களினால் அதிக இலைகள் கீழே விழுவதாகவும் கூறி நன்கு வளர்ச்சியடைந்த 31 மரங்களில் அடிப்பகுதியில் உள்ள தோல்களை அகற்றி மரங்கள் பட்டுப்போவதற்கு தார் மற்றும் சில இராசாயனம் கலந்து பூசப்பட்டுள்ளதால் குறித்த மரங்கள் மீண்டும் துளிர்க்க வாய்ப்பில்லை. குறித்த பகுதிக்கு சென்று உயர் அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டனர். எனினும் குறித்த மரங்களை அகற்றுவதற்கு முன்னதாக கடிதம் மூலம் அனுமதி கேட்கப்பட்டதாகவும் இதனை மறுத்து மரங்களை வெட்டினால் அபராதம் விதிக்கப்படும் என குறித்த ஹோட்டல் உரிமையாளருக்கு பதில் கடிதம் அனுப்பப்பட்டதாகவும் விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாகவே சூட்சுபமான முறையில் மரங்களை அகற்றுவதற்கு குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணம் நுவரெலியா மாநகர சபை, பிரதேச செயலகம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என இணைந்து ஹோட்டல் உரிமையாளர் சில சட்டங்களை மீறியிருப்பது உறுதி செய்யப்பட்டமையால் விசாரணைகளை மேற்கொண்டு ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக உச்ச நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கு தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# பதவி விலகப்போவதில்லை!

## ருஹூணு பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும், ருஹூணு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் பதவி விலகப்போவதில்லையென அவர் உறுதியாக கூறியுள்ளார்.

ரூஹுனு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை பதவி நீக்கம் செய்யுமாறு கோரி பல்கலைக்கழக கல்வித்துறை மற்றும் கல்விசாரா மாணவர் சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்நிலையில் தனக்கெதிரான குற்றச்சாட்டுக்களை மறுத்த துணைவேந்தர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

பதவி விலகும் எண்ணம் இல்லை என கல்வி அமைச்சர், செயலாளர் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் தெரிவித்துள்ளேன்.

இந்தக் கூற்றுக்கள் தொடர்பாக பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த போதுமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என நம்புகிறேன். குற்றச்சாட்டுகள் நியாயமானதாக இருந்திருந்தால், அரசாங்கம் ஏற்கனவே என் மீது நடவடிக்கை எடுத்திருக்கும்-என்றார்.

இதேவேளை, சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவியேற்ற பின்னர் கல்வித்துறை ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களை கடும் அழுத்தத்திற்கு உள்ளாக்கி தனிப்பட்ட பழிவாங்கலுக்கு உள்ளாக்கியுள்ளார் என பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவின் இணைத் தலைவர் தம்மிக்க [illegible] தெரிவித்தார். (அ)

# சகல பாடசாலைகளுக்கும் நேற்று முதல் விடுமுறை!

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

கொழும்பு, நவ. 23

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் அனைத்து தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கும் நேற்று முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

2024ஆண்டு தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

முஸ்லிம் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றன.

இதன்படி, அனைத்து பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசு முன்னுரிமை வழங்கவேண்டும்!

## விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, நவ. 23

**அரசமைப்பு விவகாரத்தைவிடவும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



புதிய அரசமைப்புக்கான ஏற்பாடுகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

மக்கள் பிரதிநிதி, மக்கள் மற்றும் தேர்தல் தொகுதிக்கு பொறுப்பக்கூறக்கூடிய வகையில் தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும். செனட் சபை உருவாக்கப்பட வேண்டும். இவ்விரு விடயங்களை செய்வதற்குரிய அரசமைப்பு மறுசீரமைப்பு யோசனையை நான் முன்வைத்துள்ளேன்.

இதனை செய்யாவிடின், புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புதிய அரசமைப்புக்குரிய பணிகளை முன்னெடுப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடமாவது தேவை. அது தொடர்பில் மக்களுக்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மேலும் ஒரு ஆண்டு தேவை. பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கு அப்பால் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என அரசாங்கம் கூறி இருந்தாலும் எந்த கொள்கையின் அடிப்படையில் இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பது பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தற்போதும் அமுலில் உள்ளது. இதற்கு புதிதாக சட்டம் இயற்ற வேண்டியதில்லை.

அரசமைப்பு மறுசீரமைப்பைவிடவும் பொருளாதாரம் பற்றி தற்போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் பாராளுமன்றத்தை நடத்துவதுகூட சிக்கலாகமாறும்- என்றார்.

(அ)

# உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, நவ. 23

2024 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர் தர பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும், நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சை டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் உயர்தரப் பரீட்சை காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும், பரீட்சையை இடையூறு இன்றி நடத்துவதற்காகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பரீட்சை திணைக்களமும் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளன.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தடுக்கும் வகையில் ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால், உதவிகளைப் பெறுவதற்கு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர இலக்கமான 117 அல்லது விசேட ஒருங்கிணைந்த அவசர செயற்பாட்டு அறை இலக்கங்களான 0113668020, 0113668100, 0113668013, 0113668010 மற்றும் 0763117117 ஆகிய இலக்கங்களுக்கு அழைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் அவசர இலக்கமான 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அது குறித்து அறிவிப்பதன் ஊடாக உடனடியாக நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(அ)

# மின்சார வாகனங்களின் இறக்குமதியில் முறைகேடு

கொழும்பு, நவ. 23

இலங்கைக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 1000 இற்கும் மேற்பட்ட உரிமங்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக விசேட கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளில் பணி புரியும் தகுதியுடைய பலருக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை என கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை தற்போது பாராளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கை கூடிய விரைவில் சபையில் சமர்பிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

# பொலிஸ் அதிகாரிகளின் பிரச்னைகள் தீர்ப்பதற்காக அவசர வேலைத்திட்டம்!

கொழும்பு, நவ. 23

குறைந்த தரத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக அவசர வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்கு கீழுள்ள அதிகாரிகள் பல்வேறு பிரச்னைகளுக்கு உள்ளாகி வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

தொலைதூரப் பகுதிகளில் பணிக்கமர்த்தப்படுகின்றமை, தொடர்ச்சியாக கடமைகளில் அமர்த்தப்படுதல், முறையான பதவி உயர்வு நடைமுறை இன்மை, முறையற்ற இடமாற்றம் போன்ற பல பிரச்னைகள் காணப்படுவதாக அவர் கூறினார்.

இப்பிரச்னைகள் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிவர்த்திப்பதற்கான முறைமையைத் தயாரிக்கவுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பெருமைக்குரிய பொலிஸ் அதிகாரியாக, தனது தொழில் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில், பொலிஸ் அதிகாரிகள் பணியாற்றத் தேவையான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

(அ)

# தாய்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்ட யானையின் தந்தங்களை வெட்ட திட்டம்!

கொழும்பு, நவ. 23

இலங்கையில் இருந்து தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட 29 வயதுடைய ப்ளாய் சாக் சுரின் (முத்து ராஜா) என்ற யானையின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த லாம்பாங்கில் உள்ள தாய்லாந்து யானைகள் பாதுகாப்பு மையத்தின் கால்நடை மருத்துவர்கள் அதன் தந்தங்களை வெட்ட திட்டமிட்டுள்ளனர்.

யானையின் நீண்ட மற்றும் கனமான தந்தங்கள் அதன் அன்றாட நடவடிக்கைகளை பாதிக்கத் தொடங்கியமை கண்டறியப்பட்ட நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் லாம்பாங் மாகாணத்தில் உள்ள தேசிய யானைக் கழகத்தின் தாய் யானைகள் பாதுகாப்பு மையத்தின் யானைப் பாதுகாப்புத் தலைவர் மருத்துவர் தவீபோக் அங்கவானிச் கூறுகையில்-

ப்ளாய் சாக் சுரினின் ஒட்டுமொத்த உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், மிக நீளமான தந்தங்கள் அதன் உடல் அமைப்பைப் பாதிக்கிறது.

நீண்ட தந்தங்கள் காரணமாக யானை நடக்கும்போது தலையை உயர்த்தி இருக்கவேண்டும் என்பதை நாங்கள் கவனித்தோம்.

எனவே, கழுத்து தசைகளில் அதிகப்படியான அழுத்தத்தைக் குறைக்க தந்தங்களின் நீளத்தை குறைக்க வேண்டியது அவசியம்.

நாங்கள் தற்போது பல்வேறு மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசித்து வருகிறோம், ஏனைய உடல் பாகங்களுக்கு தாக்கங்களை ஏற்படுத்தாமல் தந்தத்தின் நீளத்தை எவ்வாறு குறைப்பது என்பதை நாங்கள் திட்டமிடுவோம் என்று கூறினார்.

(அ)

# வங்காளவிரிகுடாவில் உருவாகும் குறைந்த காற்றழுத்த மண்டலம்!

கொழும்பு, நவ. 23

தென்கிழக்கு வங்காளவிரிகுடா கடலில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அடுத்த இரண்டு நாட்களில் அது தென்மேற்கு வங்காளவிரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும், அத்தொகுதி மேலும் வலுவடைந்து இலங்கையின் கிழக்குக் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் முன்னறிவிப்புகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# குறைந்த எரிபொருள் செலவுடைய வாகனம் எம்.பிக்களுக்கு கிடைக்கும்!

கொழும்பு, நவ. 23

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறைந்த எரிபொருள் செலவுடைய வாகனம் வழங்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிக்காலம் முடியும் வரை அந்த வாகனத்தை பயன்படுத்தி மக்கள் சேவையை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாது எனவும் மக்களின் வரிப்பணம் விரயமாவதை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

# போலி கிரீம் வகைகளுடன் மூவர் கொழும்பில் கைது!

கொழும்பு, நவ. 23

கொழும்பு - புறக்கோட்டை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், முடிகளை நிறமூட்டுவதற்கு பயன்படுத்தப்படும் போலி கிரீம் வகைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் பிரபல வர்த்தக நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி இந்த போலி கிரீம் வகைகளை விற்பனை செய்து வந்துள்ளதாக, தெரியவந்துள்ளது.

போலி கிரீம் வகைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தொடர்பில் முறையிட 1971 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளுமாறும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பினை உருவாக்க முழு ஆதரவு!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

**"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி கதைப்பதற்கான தருணம் இதுவல்ல. எனவே, வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணிகளை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஆதரவு வழங்கப்படும்."**

இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் களுத்துறை மாவட்டத்தில் களமிறங்கி வெற்றி பெற்றுள்ள சட்டத் தரணி அஜித் பி பெரேரா கூறி யவை வருமாறு-"13,14,15 என கதைத்துக்கொண்டிருப்பதற்க ான தருணம் இதுவல்ல. நாட் டுக்கு புதியதொரு அரசமைப்பு அவசியம். நாடாளுமன்றத்தில் இதனை செய்வதற்குரிய மூன்றி லிரண்டு பெரும்பான்மை பல மும் தேசிய மக்கள் சக்திக்கு கிட்டியுள்ளது.

அதேபோல வடக்கையும், கிழக்கையும், மலையகத்தை யும்கூட பிரதிநிதித்துவப் படுத் தும் கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறியுள்ளது. மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்ப டுத்தும் உறுப்பினர்கள் அக்கட் சியில் உள்ளனர்.

புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்ற உறுதிமொ ழியை தேசிய மக்கள் சக்தி கொண்டுவர வேண்டும். அதற் குரிய ஆதரவை நாம் வழங்கு வோம். ஒரு வருட காலப்பகு திக்குள் இதற்குரிய ஏற்பாடுகளை செய்யவேண்டும். சர்வகட்சி பொறிமுறை ஊடாக இதற்கான பணியை முன்னெடுத்தால் நல்லது-என்றார். (அ)

# அடுக்குமாடி குடியிருப்பில் பெண் மர்மமான முறையில் படுகொலை

## 8 பவுண் தங்கம் மாயம்

கொழும்பு, நவ. 23

கொழும்பில் உள்ள அடுக் குமாடி குடியிருப்பின் இரண் டாவது மாடியில் உள்ள வீடொன்றில் தனிமையில் இருந்த 70 வயதுடைய பெண் ஒருவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள் ளார்.

கிருலப்பனை, காலிங்க மாவத்தையில் உள்ள வீட்டுத் தொகுதியில் நேற்று முன் தினம் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் இருந்து சுமார் 8 பவுண் தங்கம் திருடப் பட்டுள்ளதாகவும் கிருலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட பெண் தனது கணவர், மகள் மற்றும் பேர்த்தியுடன் வசித்து வந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை 6.30 மணியளவில் மகள் பேர்த்தியை பாடசாலைக்கு விட்டுவிட்டு வேலைக்குச் சென்றுள்ளார்.

கொல்லப்பட்ட பெண் மட்டும் வீட்டில் இருந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 44556 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

கொழும்பு, நவ. 23

நாட்டில் நாளொன்றுக்கு 105 டெங்கு நோயாளர்கள் பதி வாகுவதுடன், இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 44556 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. டெங்கு நோய் தடுப்பு பிரிவால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையி லேயே இவ்விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது. அந்த வகையில் நேற்று முன் தினம் வரை இம் மாதத்தில் 2027 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர். ஒக்ரோபர் மாதம் 2938டெங்கு நோயாளர்களும், செப்ரெம்பர் மாதம் 2769 நோயாளர்களும், ஆகஸ்ட் மாதம் 3897டெங்கு நோயா ளர்களும், ஜூலை மாதம் 4506 டெங்கு நோயாளர்களும், ஜூன் மாதம் 3319 டெங்கு நோயார் களும், மே மாதம் 2647 பேரும், ஏப்ரல் மாதம் 2234 பேரும், மார்ச் மாதம் 3615 பேரும், பெப்ரவரி மாதம் 6007 பேரும், ஜனவரி யில் 10417 பேரும் இனங்கா ணப்பட்டுள்ளதாக அவ் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள் ளது. இதேவேளை மேல்மாகா ணத்தில் 19056 பேரும், வடமா காணத்தில் 4962 பேரும், டெங்கு நோயாளர்களாக இனங்காணப் பட்டுள்ளனர். இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 21 பேர் டெங்கு நோயால் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத் தக் கது. (அ)

# மருந்துக் கொள்வனவு மோசடிகள் விசாரணைக்கு ஒத்துழைக்க தயார்!

## ரமேஸ் பத்திரண கூறுகிறார்

கொழும்பு, நவ. 23

சுகாதார அமைச்சில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மருந்து கொள்வனவு மோசடிகள் தொடர்பில் முன் னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நான் தயார் என முன்னாள் சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

மருந்து மோசடிகள் தொடர் பில் வாக்குமூலமளிப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத் துக்கு வருகை தந்தபோது ஊட கவியலாளர்களின் கேள்விக ளுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில்-கடந்த காலங்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மருந்து கொள்வனவு மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப் படும் எந்தவொரு விசாரணைக் கும் முழுமையான ஒத்துழைப் பினை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். அமைச்சரவை தீர்மானங்கள் வெவ்வேறு அதிகாரிகளின் ஆலோசனைக ளுக்கமைய நிதி அமைச்சின் அங்கீகாரத்துடனேயே எடுக் கப்படுகின்றன.

எனவே இவை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எமது தரப்பில் பிரச்னைகள் இல்லை. எவ்வாறிருப்பினும் நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தால் அவற்றுக்கு ஒத்துழைப் பதற்கும் நாம் தயாராக இருக் கின்றோம்.

உற்பத்தியின்போது மருந்து பிரச்னை ஏற்பட்டுள்ளது என் பது தெளிவாகிறது. அவை தொடர்பிலேயே விசாரணை கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங் குவதற்காகவே நான் இங்கு முன் னிலையாகியிருக்கின்றேன். புதிய சுகாதார அமைச்சர் சிறப் பாக பணியாற்ற வாழ்த்து கின்றேன்-என்றார். (அ)

# எரான், ஹிருணிக்காவுக்கு தேசியப் பட்டியல் ஆசனம்!

கொழும்பு, நவ. 23

கட்சிக்காக கடுமையாக உழைத்த எரான் விக்கிரமரத்ன, ஹிருணிக்கா ஆகியோருக்கு தேசிய பட்டியலை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கிறோம். தேசிய பட்டியல் விவகாரத்துக்கு வெகுவிரைவில் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட் டில் உறுதியாக உள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவகாரத் துக்கு வெகுவிரைவில் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப் பாட்டில் உறுதியாக உள்ளேன். கட்சிக்காக கடுமையாக உழைத்த எரான் விக்கிரமரத்ன, ஹிருணிக்கா பிரேமச்சந்திர ஆகியோர் குறைந்த எண்ணிக்கையிலான வாக்குகளிலேயே தோல்வியடைந்தார்கள். இவர்களுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கி றோம்.

ஜனாதிபதியின் உரையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட் டுள்ளன. நாணய நிதியத்துட னான செயற்றிட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாக ஜனாதிபதி குறிப் பிட்டுள்ளார். இதனையே நாங் கள் ஆரம்பத்தில் இருந்து குறிப் பிட்டு வருகிறோம்.

வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் தெளி வாக குறிப்பிடவில்லை. ஆகவே இது சற்று அவதானிக்க கூடிய தொரு விடயமாகும். அரசாங் கம் எவ்வகையான வெளிவிவ காரக் கொள்கையை கடைப்பி டிக்கவுள்ளது என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரிசி இறக்குமதி செய்யப்படும் போது பெரும் அரிசி ஆலையா ளர்கள் பயனடைவார்கள். இவ்விடயத்தில் அரசாங்கம் நீண்டகால கொள்கைத் திட் டத்துக்கு அமைய தீர்மானங் களை எடுக்க வேண்டும்-என்றார்.

# இஸ்ரேலுக்கான விமான பயணச்சீட்டு கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 23

பணி நிமித்தம் இஸ்ரேலுக் குப் பயணிக்கும் பணியாளர்க ளுக்கான விமான பயணச்சீட்டு கட்டணத்தை 75 ஆயிரம் ரூபா வாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் கொரிய பணிக்காக விண்ணப்பிக்கும் நபர்களுக்கான விமானப் பய ணச்சீட்டு வழங்கும் முறைமை தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

விமானப் பயணச்சீட்டைப் பெற்றுக்கொண்ட சிலருக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே, சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானப் பயணச்சீட்டுகளை நேரடியாகப் பெற்றுக்கொள் வதற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதுடன், கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

முந்தைய முறைமையில் இம்மாதம் இறுதிவரை விமான ரிக்கெட்டுகள் முன்பதிவு செய் யப்பட்டுள்ளதால், எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் புதிய முறையினை அமல்படுத்து வதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளதாக இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணிய கம் தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய!

கொழும்பு, நவ. 23

அமெரிக்க /ஹஸ்டன் பல்க லைக்கழகம் மற்றும் எம்.டி எண்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேரா சிரியர் கோமிகா உடுகமசூரிய, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோச கராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனக் கடிதம் நேற்று ஜனாதிபதி செயலகத் தில், ஜனாதிபதியின் செயலா ளர் நந்திக சனத் குமாநாயக்க வினால், பேராசிரியர் கோமிக உடுகமசூரியவிடம் வழங்கப் பட்டது.

கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரி பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழக இரசாயனவியல் பட்டதாரி ஆவார்.

பேராசிரியர் கோமிகா உடு கமசூரிய, அமெரிக்காவின் மிச் சிகனில் உள்ள வெய்ன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் ஒரு கலாநி திப் பட்டத்தையும், டெக்சாஸ் தென் மேற்கு மருத்துவ மையத் தில் ஒரு கலாநிதிப் பட்டத்தை யும் பெற்றுள்ளார்.

பல காப்புரிமைகளைப் பெற்றுள்ள இவர், அமெரிக்க அரச பணியில் இருந்து விலகி, ஜனாதிபதி அனுரகுமார திசா நாயக்கவின், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகராக இணைந்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது

## கல்முனையில் தொடரும் வேட்டை

கல்முனை, நவ. 23


**பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஐஸ் போதைப்பொருட்களை நீண்ட காலமாக சிறு பொதி செய்து வியாபாரம் செய்து வந்த இளைஞர்கள் இருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.**

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

கல்முனைக்குடி - மதிரிஸா பகுதியைச் சேர்ந்த 26 வயது இளம் குடும்பஸ்தர் 970 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் கல்முனைக்குடி 2 ஆம் பிரிவு கிறீன் பீல்ட் பகுதியைச் சேர்ந்த 20 வயது சந்தேக நபர் 870 மில்லி கிராம் போதைப் பொருளுடனும் கைதாகினர்.

கைதான 2 சந்தேக நபர்களையும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர். ஏ. டி. சி.எஸ்.



ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் ஐஸ் போதைப்பொருள்கள் அதிகளவாக மீட்கப்பட்டு வருகின்றன. (எ)

# சிவில் சமூக பிரதிநிதிகளுடன் சீனத் தூதுவர் விசேட சந்திப்பு

மட்டக்களப்பு, நவ. 23

மட்டக்களப்புக்கு வருகை தந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு சென்கொங், மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு பட்ட விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ். மாமாங்கராஜா தலைமையில் தூதுவரை சந்தித்த குழுவினர் மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை சார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலான திட்டங்களையும் முன்வைத்துள்ளனர்.

இதில் நீண்டகால மற்றும் குறுகிய கால திட்டங்கள் என பல விடயங்கள் அடங்குவதுடன், கல்வித்துறை, மருத்துவத்துறை, தொழிற்துறை, தொழிற்பயிற்சி வழங்குதல், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்தி, மாணவர்கள் பாடசாலை இடைவிலகல், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு விசேட தேவையுடைய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுகள் தொடர்பான பல விடயங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கு 1. 5 பில்லியன் டொலர் நிதி வழங்கியுள்ளதுடன் கோவிட் தொற்று பாதிப்புற்றிருந்த காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளை வழங்கியதாகவும், கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு பல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டதையும், பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட போது கிழக்கு மாகாண மக்களுக்காக அரிசி வழங்கப்பட்டதையும் சீனத் தூதுவர் கூறினார். அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்காக பாடசாலை சீருடை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற் கொண்டதையும், சீனத் தூதுவர் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக் காட்டியிருந்தார். சீனத் தூதரக அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.



# வலய கல்வி பணிப்பாளருக்கு பாடசாலையில் கௌரவிப்பு

கல்முனை, நவ. 23

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இலங்கையில் 2ஆம் இடத்தை பெற்றமைக்காக கல்முனை வலய கல்விப் பணிப்பாளரை கௌரவிக்கும் நிகழ்வும், மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் யூ. எல். நஸார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சாஹூல் ஹமீட் நஜீம் கலந்து கொண்டார். அவரது கல்விச் சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தினரால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ். எல். சம்சுதீன், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர், பொறியியலாளர் கமால் நிசாத், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டு பத்திரங்களும் கையளிக்கப்பட்டன. (எ)

# ஐந்து வருட அபிவிருத்தித் திட்டம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, நவ. 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் ஐந்து வருடங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள், மாவட்டத்தின் தேவைப்பாடுகள் உட்பட அனைத்து விடயங்களும் அடங்கிய ஐந்து ஆண்டு திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளீதரன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்துத் திணைக்களங்கள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையின் கீழ் யு. என். டி. பியின் நிதியுதவியுடன் இந்த ஐந்து வருட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஐந்து திட்டங்களை உள்ளடக்கி"யதாக ஐந்து வருட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

விவசாயம், கால்நடை, மீன்பிடி உட்பட உற்பத்தி துறை சார்ந்த திட்டங்களை உள்ளடக்கியதாகவும் நீர்ப்பாசனம், வீதிப் புனரமைப்பு உட்பட பல விடயங்களை உள்ளடக்கியதான உட்கட்டுமான திட்டங்கள், சேவைத் துறைகள் உட்பட பல்வேறு துறைகளின் பிரச்னைகள் ஆராயப்பட்டு அந்த பிரச்னைகளுக்கான தீர்வுகளாக பல்வேறு விடயங்கள் இந்த ஐந்தாண்டு திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் காணப்படும் வளங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு அதற்கான முதலீடுகளைப் பெற்று தொழில்துறைகளை முன்னேற்ற நிலைக்கு கொண்டு சென்று ஏற்றுமதித் துறையை மேம்படுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் உட்பட பல்வேறு திட்டங்கள் இதன் மூலம்முன்மொழியப்பட்டுள்ளன.

அங்குரார்ப்பண நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந்த், காணிப் பிரிவுக்குரிய மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் நவநீதன், யு. என். டி. பி. மாவட்ட திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாவட்டத்தின் அனைத்துத் துறைகளும் ஆய்வு செய்யப்பட்டு இந்தத் திட்டம் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல், வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல் ஊடாக செயல்படுத்துவதற்கும் அதனை ஆறு மாதகாலத்துக்கு ஒருமுறை ஆய்வுசெய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# மு. கா. தேசியப்பட்டியல் எம்.பியாக ஏறாவூர் முஹம்மத் சாலி நளீம்

ஏறாவூர், நவ. 23

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஏறாவூர் முஹம்மத் சாலி நளீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் இது தொடர்பான கடிதத்தை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார். (எ)








கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா கல்லூரி அதிபர் எஸ். இ. றெஜினோல்ட் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சர்வதேச நீதிமன்ற பிடியாணை யூத இன வெறுப்பின் விளைவு!

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கடும் சாடல்



டெல் அவிவ், நவ. 23

**தன் மீதான பொய்க் குற்றச்சாட்டுகளும், அதற்காக சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணையும் யூத இன வெறுப்பின் விளைவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.**

பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இஸ்ரேல் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில்தான் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டது நீதிமன்றம். பிரதமர் பெஞ்சமின் மட்டுமல்லாது இஸ்ரேல் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட், ஹமாஸ் தலைவர் ஆகியோருக்கும் பிடியாணை பிறப்பித்தது.

இந்த நிலையில் சர்வதேச நீதிமன்ற பிடியாணை உத்தரவு குறித்து நெதன்யாகு எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில் வெளியிட்ட வீடியோவில், "யூத இனம் மீதான வெறுப்புடன் எடுக்கப்பட்ட முடிவு இது. நவீன ட்ரேபஸ் விசாரணைக்கு சமமானது" என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

1894 - 1906 இடையேயான காலகட்டத்தில் பிரான்ஸில் உளவு பார்த்ததாக யூத இராணுவ அதிகாரியான ஆல்ப்ரெட் ட்ரேபஸ் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவர் ஜேர்மனுக்கு இராணுவ இரகசியங்களை விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் அவர் மீதான குற்றச்சாட்டுகள் போலியானவை என உறுதியாகி அவர் பிரெஞ்ச் இராணுவத்தில் மீண்டும் இணைக்கப்பட்டார். இவருடன் தான் இப்போது நெதன்யாகு தன்னை ஒப்பிட்டுள்ளார். ட்ரேபஸ் மீதான போலிக் குற்றச்சாட்டுகள் போன்றவையே தன் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் என்று நெதன்யாகு கூறியுள்ளார். மேலும், தன்னை நவீன கால ட்ரேபஸ் எனக் கூறும் நெதன்யாகு தன் மீதான குற்றச்சாட்டும் போலியானது என்பது நிரூபணமாகும் எனக் கூறியுள்ளார். (எ)




# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீண்டும் கைது!

இஸ்லாமாபாத், நவ. 23

ஊழல் வழக்கில் பிணையில் வெளிவந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், போராட்ட வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அவர் இப்போதைக்கு விடுதலையாக வாய்ப்பில்லை எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் தலைவர்களுக்கு வெளிநாட்டு தலைவர்கள் வழங்கும் பரிசுகள் எல்லாம் அரசு கருவூலத்துக்கு சென்று விடும். அவ்வாறு வழங்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றை, இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அரசு கருவூலத்துக்கு குறைந்த பணம் செலுத்தி முறைகேடான வழியில் எடுத்துக் கொண்டதாக ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இம்ரான் கானுக்கு பிணை வழங்கியது.

பிணை கிடைத்து சில மணி நேரத்தில், தீவிரவாதம் மற்றும் இதர வழக்குகளில் இம்ரான் கானை ராவல்பிண்டி பொலிஸார் கைது செய்தனர். (எ)




உங்கள் நாட்டுக்கு செல்லுங்கள்

# காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு நியூசிலாந்து மக்கள் எச்சரிக்கை

வெலிங்டன், நவ. 23

"உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்லுங்கள்" என்று காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு நியூசிலாந்து மக்கள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர்.

இந்தியாவில் சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் பஞ்சாப் மாநிலத்தை தனியாக பிரித்து காலிஸ்தான் என்ற பெயரில் புதிய நாட்டை உருவாக்க வேண்டும் என்று காலிஸ்தான் பிரிவினைவாதிகள் கோரி வருகின்றனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் திரைமறைவில் செயல்படும் காலிஸ்தான் அமைப்பினர், இந்தியாவுக்கு எதிராக பல்வேறு சதிகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இந்த நிலையில் ஆக்லாந்தில் நடைபெற்ற பேரணியில் காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு நியூசிலாந்து மக்கள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (எ)

# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல்

## 1,000 நாட்களில் இதுவே முதல் முறை



கீவ், நவ. 23

உக்ரைன் மீது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. ரஷ்யா - உக்ரைன் இடையே போர் ஆரம்பித்து 1,000 நாட்களைக் கடந்துள்ள நிலையில் இவ்வகையான ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்துவது இதுவே முதல் முறையாகும்.


கடந்த 2022இல் ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து முதன்முறையாக உக்ரைன் நாட்டின் மீது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைப் பயன்படுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ரஷ்ய தாக்குதலை உக்ரைன் விமானப் படை உறுதி செய்துள்ளது. ஆனால், எந்தவிதமான ஆயுதங்கள் இருந்தன என்பதைப் பற்றி குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. ரஷ்யாவின் அஷ்ட்ராகன் பகுதியிலிருந்து ஏவுகணைகள் ஏவப்பட்டது என்று உக்ரைன் விமானப் படை ரெலிகிராம் செயலியில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, உக்ரைன் முதன்முறையாக அமெரிக்கா, பிரிட்டிஷ் ஏவுகணைகளை ரஷ்ய எல்லைக்குள் ஏவி தாக்குதல் நடத்தியிருந்தது. இதற்குப் பதிலடியாக ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை உக்ரைனுக்குள் ஏவியுள்ளது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ. சி. பி. எம். ரக ஏவுகணைகள் அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று தாக்குதல் நடத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டவையாகும். இந்த ரக ஏவுகணைகளை ரஷ்யா பயன்படுத்தியுள்ளது இரு நாடுகள் இடையே போரை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

# இந்தியப் பிரதமர் மோடிக்கு கயானாவின் உயரிய விருது

ஜோர்ஜ்டவுன், நவ. 23

கயானா நாட்டின் உயரிய விருதான "ஆர்டர் ஆப் எக்ஸலன்ஸ்" இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது. விருதை வழங்கிய கயானா ஜனாதிபதி முகமது கூறும்போது, "சர்வதேச அரங்கில் வளரும் நாடுகளின் உரிமைகளுக்காக இந்தியா போராடுகிறது. உலக சமுதாயத்துக்கு சிறப்பான பங்களிப்பை பிரதமர் நரேந்திர மோடி வழங்கி வருகிறார். இந்தியா-கயானா உறவை அவர் வலுப்படுத்தி வருகிறார். இதற்காக அவருக்கு இந்த விருதை வழங்குகிறோம் என்று தெரிவித்தார்.(எ)



# பயங்கரவாதிகள் வெறிச்செயல் 38 பேர் உயிரிழப்பு, 29 பேர் காயம்

## பாகிஸ்தானில் தொடரும் துயரம்

பெஷாவர், நவ. 23

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் பயணிகள் வாகனங்கள் மீது பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 38 பேர் பலியாகினர். 29 பேர் படுகாயமடைந்தனர்.

பெஷாவரில் இருந்து பராசினார் நகருக்குச் சென்ற பயணிகள் வாகனம் ஒன்றின் மீதும், பராசினாரில் இருந்து பெஷாவர் நோக்கி வந்து கொண்டிருந்த மற்றொரு பயணிகள் வாகனத்தின் மீதும் குர்ரம் என்ற இடத்தில் வைத்து பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 38 பேர் உயிரிழந்தனர் என்றும், 29 பேர் படுகாயமடைந்ததாகவும் அதிகாரிகள் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் 150 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்திய அணி

### அவுஸ்திரேலியா அபார பந்து வீச்சு

பெர்த், நவ. 23

முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இந்தியாவை வெறும் 150 ஓட்டங்களுக்குள் அவுஸ்தி ரேலியா சுருட்டியது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹேசில்வுட் 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள இந்திய கிரிக்கெட் அணி "பார்டர் - கவாஸ்கர்" கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் மைதானத்தில் நேற்றுக்காலை தொடங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஜஸ்பிரீத் பும்ரா முதலில் துடுப்பெடுத்தாடுவ தாக அறிவித்தார். இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் களாக ஜெய்ஸ்வால் - கே. எல். ராகுல் களமிறங்கினர். அவுஸ்திரேலிய தரப்பில் முதல் ஓவரை ஸ்டார்க் வீசி னார். அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் இந்தியா விரைவில் விக்கெட்களை இழந்து தடுமாறியது.

8 பந்துகளை எதிர்கொண்ட ஜெய்ஸ்வால் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் 3ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய தேவ்தத் படிக்கல் 23 பந்துகளை சந்தித்த நிலையில் ஓட்டம் எது வும் இன்றி அவரும் ஆட்டமிழந்தார். இதன்பின் களமி றங்கிய இந்திய அணியின் முன்னணி வீரரான விராட் கோலி 12 பந்துகளை எதிர்கொண்ட நிலையில் 5 ஓட் டங்களை பெற்ற நிலையில் ஹேசில்வுட் வீசிய பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் கே. எல். ராகுல் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார்.



இருப்பினும் 74 பந்துகளை எதிர்கொண்ட நிலையில் 26 ஓட்டங்களில் இருந்தபோது நடுவரின் தவறான முடிவால் அவரும் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த துருவ் ஜூரல் தாக்குப்பிடிக்கவில்லை. 11 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் கை கோர்த்த ரிஷப் பண்ட் - அறிமுக வீரர் நிதிஷ் ரெட்டி இணை இணைப்பாட்டம் அமைத்து அணியை சரிவிலிருந்து மீட்டது. ஒரு கட்டத்தில் இந் தியா 100 ஓட்டங்களை கடக்குமா? என்று எதிர்பார்த்த நிலையில் இவர்களின் பொறுப்பான ஆட்டத்தால் இந் திய அணி 100 ஓட்டங்களை கடந்தது. ரிஷப் பண்ட் தனது பங்குக்கு 37 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட் டமிழந்தார்.

இறுதி கட்டத்தில் களமிறங்கிய வீரர்கள் யாரும் பெரிதாக விளையாடவில்லை. வாஷிங்டன் சுந்தர் 4 ஓட்டங்களிலும், ராணா 7 ஓட்டங்களிலும் பும்ரா 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். நிதிஷ் ரெட்டி 41 ஓட்டங்களில் இறுதியாக ஆட்டமிழந்தார்.

முடிவில் 49. 4 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்தியா முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்களும், ஸ்டார்க், கம்மின்ஸ் மற்றும் மார்ஷ் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

## 77 ஆண்டுகளில் முதல்முறை பும்ரா - கம்மின்ஸ் சாதனை

பெர்த், நவ. 23

இந்தியா - அவுஸ்திரேலியா இரு அணிகளுக்கும் வேகப்பந்து வீச்சாளர்கள் தலைவர்களாக செயல்படுவது 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். அந்த வகையில் பும்ரா - கம்மின்ஸ் இணை சாதனைப் பட்டியலில் இணைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையி லான முதலாவது போட்டி பெர்த் மைதானத்தில் நேற்றுத்




தொடங்கியது.

இந்தப் போட்டிக்கான இந்திய அணிக்கு ரோஹித் சர்மா இல்லாத சூழலில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா தலைவராக செயல்படுகிறார். மறுபுறம் அவுஸ்தி ரேலியாவுக்கு தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ் உள்ளார்.

இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் 1947ஆம் ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட்டில் நேருக்கு நேர் மோதி வரு கின்றன. இரு அணிகளுக்கும் வேகப்பந்து வீச்சாளர் கள் தலைவர்களாக இருப்பது 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். இந்த சாதனையை பும்ரா மற்றும் கம்மின்ஸ் இணைந்து படைத்துள்ளனர்.(எ)

## இந்திய மகளிர் சம்பியன்



புதுடில்லி, நவ. 23

மகளிர் ஆசிய சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவின் பீஹார் மாநிலம் ராஜ்கிர் பகுதியில் நடை பெற்றது. இதன் இறுதிப் போட்டியில் நடப்பு சம்பிய னான இந்திய அணி, பாரிஸ் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சீனாவுடன் மோதியது. இதில் இந்திய அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம் பியன் பட்டத்தை சுவீகரித்தது. (எ)

## "எந்தவொரு டெஸ்ட் தொடரும் ஆஷஸை நெருங்க முடியாது"

பெர்த், நவ. 23

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் இடை யிலான ஆஷஸ் தொடருக்கு நிகராக இந்தியா - அவுஸ்தி ரேலியா மோதும் பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் போட் டித் தொடர் உள்ளது என்று கூறப்படுவதை இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் மறுத் துள்ளார்.

எந்தத் தொடரும் ஆஷஸை நெருங்க முடியாது என் றும் அவர் கூறினார். இது தொடர்பில் அவர் கூறுகை யில், பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் தொடர் மிகப்பெரிய போட்டி என்று இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவில் சில பேச்சுகள் காணப்படுகின்றன. அதை நான் மறுக்கிறேன்.

வரலாறு என்று வரும் போது எதுவும் ஆஷஸ் தொடரை நெருங்க முடியாது. இங்கிலாந்து மற்றும் அவுஸ் திரேலியாவுக்கு இடையே 150 வருடங் கள் கொண்ட பாரம்பரியமும், போட்டியும் இருந்து வருகிறது."- என் றார். (எ)

இலங்கைக்கு எதிரான டெஸ்ட்

## தென்னாபிரிக்க குழாத்தில் மீண்டும் இணைந்த பவுமா

ஜோகனஸ்பேர்க், நவ. 23

இலங்கைக்கு எதிராக அடுத்த வாரம் ஆரம்பமாக வுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான தென்னாபிரிக்க குழாத் தில் மீண்டும் அணித் தலைவர் தெம்பா பவுமா இணைந் துள்ளார்.

இடது முழங்கையில் காயமடைந்ததால் அண்மை யில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் விளையாடாமல் இருந்த அணித் தலைவர் தெம்பா பவுமா பூரண குணமடைந்ததை அடுத்து குழாத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை முன்னிட்டு 14 வீரர்களைக் கொண்ட குழாத்தை தென்னாபிரிக்கா அறிவித்தது.

தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக அமையும் என்பதால் ககிசோ ரபாடா, டேன் பேட்டர்சன், வியான் முல்டர் ஆகியோரும் குழாத்தில் இடம்பெறுகின்றனர். இதற்கமைய 5 பந்து வீச்சாளர்கள் அணியில் இடம்பெறுகின்றனர்.

அதேவேளை, கேஷவ் மஹாராஜ், செனுரன் முத்து சாமி ஆகிய இருவரும் பிரதான சுழற்பந்து வீச்சாளர்க ளாக அணியில் இடம்பெறுகின்றனர்.

நடப்பு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்புகள் இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இருப்பதால் இந்த டெஸ்ட் தொடர் இரண்டு அணிகளுக்கும் முக்கி யம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் அணிகளுக்கான தரவரிசை யில் அவுஸ்திரேலியா 62. 50 சதவீத புள்ளிகளுடன் முதலாம் இடத்திலும் இந்தியா 58. 33 சதவீத புள்ளிக ளுடன் இரண்டாம் இடத்திலும் இலங்கை 55. 56 சதவீத புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் நியூசிலாந்து 54.55 சதவீத புள்ளிகளுடன் நான்காம் இடத்திலும் தென்னாபிரிக்கா 54.17 சதவீத புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்திலும் உள்ளன.

தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையி லான முதலாவது டெஸ்ட் போட்டி டேர்பனில் எதிர்வ ரும் 27ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதிவரையும் இரண்டாவது டெஸ்ட் போட்டி போர்ட் எலிஸபெத் தில் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதிவரையும் நடைபெறும். (எ)

## ஐ. பி. எல். மெகா ஏலம் நாளை ஆரம்பிக்கிறது

டுபாய், நவ. 23

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி தொடரின் 18ஆவது சீசன் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் நாளை யும் நாளை மறுதினமும் (24, 25ஆம் திகதிகளில்) சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிக்கான திகதி அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுவரை இல்லாத வகையில் ஐ. பி. எல். போட்டி யின் அடுத்த 3 சீசன்களுக்கான போட்டி திகதிகள் வெளி யிட்டுள்ளன. இதன்படி மார்ச் 14ஆம் திகதி 18ஆவது சீசன் போட்டி தொடங்குகிறது. மே மாதம் 25 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது என்று கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டு சீசன் மார்ச் 15 ஆம் திகதி முதல் மே 31 ஆம் திகதி வரையிலும், 2027ஆம் ஆண்டு சீசன் மார்ச் 14ஆம் திகதி முதல் மே மாதம் 30 ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளன என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 3 சீசன்களைப் போலவே 2025ஆம் ஆண்டு சீசனிலும் 74 போட்டிகள் இருக்கும். போட்டிக்கான திகதி குறித்து நேற்றுக் காலை அணி உரிமையாளர்க ளுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. போட் டிக்கான இடம், யார் - யார் எந்தத் திகதியில் மோதுவது உள்ளிட்ட விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

ஐ. பி. எல் வீரர்கள் ஏலத்துக்கான இறுதிப் பட்டிய லில் 574 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 366 இந்தியர்கள் மற்றும் 208 வெளிநாட்டு வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். 10 அணிகள் மொத்தம் 204 இடங்களை நிரப்ப வேண்டும், அவற்றில் 70 இடங்கள் வெளிநாட்டு வீரர்களுக்கானது.

இந்த நிலையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் ஏல பட்டியலில் சேர்க்கப்பட்டுள் ளார். இதை இந்திய கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள் ளது. ஆனால், அவரது அடிப்படை விலை குறித்து தெரிவிக்கப்படவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன அரசாங்கத்தின்...

சென் ஹொங் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் டாங் யாண்டி மற்றும் சீனத் தூதரகத்தின் மூத்த அதிகாரிகள் உட்பட திட்டக் கட்டடக்கலை வடிவமைப்பு ஆலோசகர்களுடன் இணைந்து கொண்டனர்.

வீடமைப்பு பிரதி அமைச்சர் டி. பி. சரத், அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எல். பி. குமுதுலால் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பேலியகொடை, தெமட்டகொடை, மொரட்டுவ, மஹரகம ஆகிய இடங்களில் இந்த வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், கொட்டாவ பிரதேசத்தில் மூத்த கலைஞர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களில் நிறைவடையும். (அ)

## மன்னிப்பு...

கலகத்தை ஏற்படுத்தினர். அவர்க ளால் இராணுவத்தினர் கொல்லப்பட் டனர். பொதுமக்களும் கொல்லப்பட் டனர்.

நாட்டில் வர்க்க ரீதியான வேறுபாட்டை மக்கள் விடுதலை முன்னணியே உருவாக்கியது.

ஆயினும் இன ரீதியான பாகுபாட்டுக்கு இனிமேல் இடம்கிடையாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அக்கிராசன உரையில் தெரிவித்துள்ளார்.

சுமார் நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்குப் பிறகு இவ்வாறான மாற்றம் மக்கள் விடுதலை முன்னணியில் நிகழ்ந்திருக்கிறது. அதனை நாம் வரவேற்கிறோம். எனினும் கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியால் நிகழ்த்தப்பட்ட சம்பவங்களுக்கு நாட்டு மக்களிடம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மன்னிப்புக் கோர வேண்டும் - என்றார். (அ)

## இடர்நிலை...

ஆக்கிரமித்துள்ளனர். அவற்றை சட்டரீதியாக அணுகி உடனடியாக இடித்து அகற்றுங்கள். தேவையேற்படின் பொலிஸாரின் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு திணைக்களங்களும் மற்றைய திணைக்களங்களைப் பார்த்துக் கொண்டிருக்காமல் உடனடியாக இந்தப் பணிகளை செய்யுங்கள். மேலும் பல இடங்களில் வாய்க்கால்களுக்குள், வீதிகளில் மக்கள் குப்பைகளை வீசுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுதான் வழி. பல தடவைகள் விழிப்புணர்வுகளை செயற்படுத்தியும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாவிட்டால், சட்ட நடவடிக்கை ஊடாக தண்டிக்கவேண்டும்- என்றார்.

கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிரஞ்சன் இங்கு குறிப்பிட்டார்.

இடர்நிலைமையின் போது தீவகத்திலுள்ள நோயாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான உதவிகளை கடற்படையினர் மேற்கொள்ள வேண்டும் எனவும், கடல் மார்க்கமாக பயணிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டால் விமானப்படையினர் உதவவேண்டும் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்தார்.

எதிர்வரும் இடர்நிலைமைகளின் போது பொதுமக்கள் இடர்முகாமைத்துவப் பிரிவின் 117 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும் எனவும், அதேநேரம் யாழ். மாவட்டத்தில் 021 222 1676, 0773957894 என்ற இலக்கங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 021 228 5330, 0772320528 என்ற இலக்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 021 229 0054 என்ற இலக்கத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் 023 211 7117 என்ற இலக்கத்துக்கும், வவுனியா மாவட்டத்தில் 0760994883 என்ற இலக்கத்துக்கும் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-05)

## என்மீதான...

பிள்ளையான், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்க திணைக்களமொன்று விசாரணைகளை மேற்கொள்வதாக வருத்தம் தெரிவித்தார்.

"சி.ஐ.டி போன்ற துறைகள் சில தனிநபர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படாமல், புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும்," என்று அவர் கூறினார்.

தனது 5 மணி நேர வாக்குமூலத்தின் போது, தமிழில் வாக்குமூலத்தை வழங்க விரும்புவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் அறிவித்ததாகவும், அதன் பின்னர், அது தொடர்பான மொழி பெயர்ப்புப் பணிகளைத் தயாரிப்பதற்காக இன்றே ஆஜராகுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததாகவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான சனல் 4 ஆவணப்படத்தில் தனது பெயர் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று இரண்டாவது நாளாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஆஜராகிய தன் பின்னர் பிள்ளையான் இதனைத் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 2023 இல், பிரிட்டிஷ் ஊடகமான சனல் 4 ஒரு வீடியோவை வெளியிட்டது. அதில் சில இலங்கை அரசாங்க அதிகாரிகள் குண்டுவெடிப்புகளுக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டும் பிரத்யேக நேர்காணல்கள் உள்ளன.

இவற்றில், பிள்ளையானின் அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானாவும் ஒருவர்.

சனல் 4 காணொளியில் தோன்றிய ஆசாத் மௌலானா, ஈஸ்டர் ஞாயிறு குண்டுதாரி சஹ்ரான் ஹாஷிம் மற்றும் கிழக்கில் அரச புலனாய்வு சேவையின் தலைவர் சுரேஷ் சாலே ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தினார்.

வீடியோ வெளியான உடனேயே, 2019 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் குறித்து அப்போதைய கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

இந்த வெளிப்பாடு குறித்து கருத்து தெரிவித்த பிள்ளையான், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் அல்லது குண்டுதாரிகளுடன் எந்த தொடர்பும் இல்லை என்று மறுத்தார், அத்தகைய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று கூறினார்.

ஆசாத் மௌலானா தமது கட்சிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து, தனிப்பட்ட பிரச்னைகளுக்காக கடந்த வருடம் தனது குடும்பத்தினருடன் இலங்கையை விட்டு வெளியேறியதாக பிள்ளையான் அப்போது பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சனல் 4 காணொளியில் வெளிப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மட்டுமின்றி, ஆசாத்மௌலானாவின்கூற்றுக்கள்தொடர்பாகவும் விசாரணை நடத்த சர்வதேச உதவியை பிள்ளையான் கோரினார். (அ)

## அரசமைப்பு...

தெரிவித்தார்.

அக்குரேகொட பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சராக நேற்று முற்பகல் கடமைகளைப் பொறுப்பேற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு அங்கிருந்த ஊழியர்களினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதானிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்காக புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் அனைவரினதும் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் எத்தகைய சட்ட ஒழுங்குகள் இருந்தாலும் மக்களின் அதிகாரம் தான் பலமாக உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணைகளின் கட்டமைப்பு மற்றும் வடிவங்களைப் பார்க்கும்போது அவர்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கின்றன.

இந்த மாற்றம் அவர்களினதும் எதிர்பார்ப்பு என்பது அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் அரச சேவையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட சுமார் 80% ஆணை எடுத்துக்காட்டுகிறது.

எனவே, தமது அரசாங்கத்திற்கு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. அதனை நனவாக்க அரச ஊழியர்களின் ஆதரவு அவசியம்.

அனைவரும் எதிர்பார்க்கும் இந்தப் புதிய மாற்றத்தில், அரச சேவையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தாமல் முன்னேற முடியாது. வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு பாய்ச்சலை ஏற்படுத்தியது அரச சேவைதான்-என்றார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, பாதுகாப்புப் பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பாதுகாப்பு படை உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## அர்ச்சுனாவுக்கு...

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிரேஷ்டத்துவத்திற்கு ஏற்ப ஆசனங்கள் ஒதுக்கப்படாததால், நேற்று முன் தினம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த ஆசனத்திலும் அமர வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்.

பாராளுமன்ற ஊழியர் ஒருவர் வந்து எம்.பி.யிடம் இது பாரம்பரியமாக எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம் என்று தெரிவித்தபோதும் அவர் ஆசனத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டார். மேலும் அர்ச்சுனா எம்.பி அங்கு நடந்துகொண்ட விதம் சமூக ஊடகங்களில் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. (அ)

## தமிழ்...

மக்கள் ஆணை என ஜனாதிபதி கூறியுள்ளதுடன், வடக்கு, கிழக்கு தெற்கு என அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பும் அதுதான் என்றும் கூறியுள்ளார். ஜனாதிபதி பிரிவினைவாதத்துக்கு எதிராக செயல்படவேண்டும். அதனையே இந்த மக்கள் ஆணை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழீழத்தை கோரி பிரிவினைவாதம் பேசிய சுமந்திரனை மக்கள் வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். மதவாதம் பேசிய ஹக்கீம்கூட மயிரிழையில் தான் வெற்றி பெற்றார்.

தற்போது புலம்பெயர் தமிழர்கள் தமது பிரிவினைவாதக் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள இந்த மக்கள் ஆணையை ஏணியாக பயன்படுத்திக் கொள்ள பார்க்கின்றனர். கனேடிய தமிழ் காங்கிரஸ் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றமைக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளது.

அத்துதுடன் தமிழ் பிரிவினைவாதிகளின் கோரிக்கையை நிறைவேற்றுமாறும் கனேடிய தமிழ் காங்கிரஸ் கோரியுள்ளது. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள், பிரிவினைவாதம் கொண்ட புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வாருங்கள், வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளை பாதுகாப்பதையும், அபிவிருத்தி செய்வதையும் நிறுத்துங்கள் என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மக்கள் ஆணையை சரியாக உணர்ந்துக்கொள்ள வேண்டும். இந்த ஆணையானது இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் எதிரானது போன்று பிரிவினைவாதத்துக்கும் எதிரானது என்பதை உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதனைதான் வடக்கு மக்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர். பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலை கொண்டுசெல்ல முற்பட்டால் அதற்கு எதிராக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைந்து நாம் கடுமையாக எதிர்ப்போம்-என்றார்.

## யாழில்...

வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை 34 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள் ளன.

ஊர்காவல்துறை பிரதேச செயலர் பிரிவில் 175 குடும்பங்களை சேர்ந்த 795 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களை சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடிமின் னல் தாக்கத்தால் 16 குடும்பங்களைச் சேர்ந்த 47பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களை சேர்ந்த 64 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 573 குடும்பங்களை சேர்ந்த 2335 பேர் வெள்ள அனுத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது வீடு ஒன்றும் பகுதியளவில் செய்த அடைந்துள்ளது. காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களை சேர்ந்த 68 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 167 குடும்பங்களை சேர்ந்த 569 பேர் பல அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களை சேர்ந்த 53 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு கொண்டும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 465 குடும்பங்களை சேர்ந்த 1517 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எதிர்க்கட்சி எம்.பிக்களை மீண்டும் இணைக்க மொட்டு தீவிர முயற்சி!

## பேச்சுவார்த்தையில் மகிந்த

கொழும்பு, நவ. 23

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி பின்னர் பிரிந்து சென்ற உறுப்பினர்களை மீண்டும் இணைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை யில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இதன்படி, பொதுஜன பெரமுனவில் இருந்து தற் போது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், அக்கட்சியில் இருந்து விலகி ஏனைய கட்சிகளில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன் றத்தில் ஒரே குழுவாக செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளு மன்ற உறுப்பினர்களை இந்தக் குழுவில் சேர்ப்பது குறித்து, மொட்டு கட்சி கவனம் செலுத்தி வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

யாழ்ப்பாண பல்கலைக்கழக

# கிளிநொச்சி வளாகத்தில் பள்ளிவாசல் நேற்று திறப்பு

கிளிநொச்சி, நவ. 23

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத் தில், மாணவர்களின் வழிபாட்டுக்காக பள்ளிவாசல் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் மாணவர்களின் வழிபாட்டுக்காக, முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப் பட்ட பள்ளிவாசல் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பள்ளிவாசல் திறக்கப்பட்டதை தொடர்ந்து, விசேட தொழுகையும் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா பங்கேற்றார்.

இந்த நிகழ்வில், பேராசிரியர்கள், விரிவுரையாளர் கள், மாணவர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# நாட்டு மக்கள் எமக்கு பாடம் கற்பித்துள்ளனர்

## கூறுகின்றார் ஹரீன்

கொழும்பு, நவ. 23

மக்கள் எங்களுக்கு ஒரு பாடம் கற்பித்துள்ளனர், நாங்கள் மீண்டும் எவ்வாறு எழுவது என கற்கவேண்டும் என முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரி வித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நேற்று சி.ஐ.டியில் ஆஜராகிய பின்னர் இதனை தெரிவித்தார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமைக்கு அமைச்சரவையே காரணமா என்ற கேள்விக்கு, அமைச் சரவை நேரடியான காரணமில்லை. நாளாந்தம் 60 முதல் 70 வரையிலான அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சர வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

அமைச்சரவைச் செயலாளர்களே இந்தப் பத்திரங் களை இறுதி செய்து சமர்ப்பிப்பார்கள். நான் எனது அமைச்சு தொடர்பான பத்திரங்களை ஆராய்ந்துள் ளேன். எனினும் நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து தனிப்பட்ட விடயங்களை சி.ஐ.டியினரிடம் தெரிவிப்ப தற்காக வந்துள்ளேன் - என்றார்.

பொதுத்தேர்தல் தோல்வி குறித்து கருத்து தெரிவித்த அவர், மக்கள் எங்களுக்கு ஒரு பாடம் கற்பித்துள்ளனர். நாங்கள் மீண்டும் எவ்வாறு எழுவது என கற்கவேண்டும். நெருக்கடியின் போது நாங்கள் அதிலிருந்து தப்பியோட வில்லை. இந்த சவாலையும் நாங்கள் எதிர்கொள்வோம். தப்பியோடமாட்டோம்.

தேர்தலின்போது எங்கள் கட்சி முற்றாக தரைமட்ட மாக்கப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் இன்னும் அழிந்து போகவில்லை - என்றார். (அ)

# மாவீரர் தினத்தால் பிற்போடப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் கூட்டம்!

கொழும்பு, நவ. 23

10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றிருந்த நிலையில் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கான பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தை நடத்துவதற்கான திகதி தீர்மானிப்பது தொடர்பில் கலந் துரையாடப்பட்டது.

இதன்போது ஆளும் தரப்பி னால் 26ஆம், 27ஆம் திகதிகள் முன்மொழியப்பட்டபோது சிறீ தரன் எம்.பி. குறித்த இரண்டு திகதி களில் மாவீரர்கள் வாரத்தின் இறுதி நாளாக இருப்பதால் பங்கெடுப்ப தில் சிரமங்கள் காணப்படுவதாக தெரிவித்தார்.

இதனையடுத்து 28ஆம் திகதி மாலை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், மாவீரர் வாரத்தி னால் கூட்டத்தில் பங்கேற்க முடி யாது என்ற சிறீதரன் எம்.பி. கூறிய போதும் எவ்விதமான பிரதிபலிப் புக்களையும் கட்சித் தலைவர்கள் வெளியிடவில்லை. (அ)

# பெண் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம்; 12 இலட்சம் பணம் கோரிய பொலிஸார்!

## இரண்டு பொலிஸ் அலுவலர்கள் பணியிடை நீக்கம்

யாழ்ப்பாணம், நவ. 23

பெண்ணொருவரிடம் பாலியல் இலஞ்சமும், 12 லட்சம் ரூபா பணமும் கோரிய பலாலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

அந்தப் பெண் தனது காதலனு டன் இருக்கும் காணொளியை வைத்து, பெண்ணின் வீட்டைக் கண்டுபிடித்த பொலிஸார் காணொ ளியைக் காண்பித்து மிரட்டியது டன், அவரிடம் பாலியல் இலஞ்ச மும் பணமும் கோரியுள்ளனர்.

இதையடுத்து, பொலிஸாரின் மிரட்டல்கள் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரியமைக்கான ஆதா ரங்கள் என்பவற்றைத் திரட்டிய அந்தப் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கி யுள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக நடவடிக்கையை மேற் கொண்ட பொலிஸார், மேற்படி இரண்டு பொலிஸ் உத்தியோகத் தர்களையும் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சந்தேக நபர்க ளான பொலிஸ் உத்தியோகத்தர் களை நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, அவர்கள் இருவரையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட் டார். கைது செய்யப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர் களும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுத்தேர்தலில் 1 இலட்சம் ரூபா மட்டுமே செலவிட்டு எம்.பியான பெண் சட்டத்தரணி!

கொழும்பு, நவ. 23

பொது தேர்தலில் வெற்றி ஈட்டு வதற்கு ஒரு லட்சம் ரூபாய் மட் டுமே செலவிட்டதாக, இம்முறை பாராளுமன்ற தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு தெரிவான சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

இதற்கு முன்னர் செயல்பாட்டு அரசியலில் பங்கேற்றது கிடை யாது. பிரதேச சபை ஒன்றைக்கூட நான் பிரதிநிதித்துவம் செய்தது கிடையாது.

மக்களுக்காக நான் பாராளு மன்றம் செல்கிறேன். இது மக்க ளுக்கு கிடைத்த பாரிய வெற்றி.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் எப் பொழுதும் எதிர்பார்த்ததே கிடை யாது. இம்முறை பொது தேர்தலுக் காக நான் தனிப்பட்ட ரீதியில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே செலவிட்டேன்.

எனது அரசாங்கம் மக்களுக்கு சேவைகளை செய்ய தவறினால் கடந்த அரசாங்கங்களைவிட வேகமாக மக்கள் எம்மை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு கிடைக்கப்பெறும் சிறப்பு ரிமைகளில் அதிகாரபூர்வ இல்லம் ஒன்று எனக்கு தேவைப்படும். அதற்காக விசேடமாக கோரிக் கைகள் எதையும் தாம் விடுக்க வில்லை - என்றார். (அ)

# பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் விலங்குகளை கட்டுப்படுத்த பிரிவு!

கொழும்பு, நவ. 23

இலங்கையில் பயிர்களுக்கு குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத் தும், தீங்கு விளைவிக்கும் விலங்குக ளின் பிரச்னைக்கு தீர்வு காண, விவ சாயம், கால்நடைகள், நிலங்கள் மற் றும் நீர்ப்பாசன அமைச்சு, ஒரு சிறப் புப் பிரிவை நிறுவியுள்ளது.

இந்த முயற்சியானது நிலையான கட்டுப்பாட்டுக்கான பல உபாயங் களை செயற்படுத்துவதை நோக்க மாகக் கொண்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் கே.டி. லால்காந்த தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

தேங்காய் மற்றும் பழங்கள் போன்ற முக்கிய பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும் டோக் குரங்குகள் மற்றும் பிற விலங்குகளை கட்டுப்படுத்த நிலை யான நடவடிக்கைகளை அடை யாளம் காண்பது குறித்து இந்த கலந்துரையாடல் கவனம் செலுத் தப்பட்டது. (அ)

# 10,000 ஏக்கராக குறைவடைந்த பெரும்போக நெற் செய்கை

வவுனியா, நவ. 23

வவுனியா மாவட்டத்தில் இம் முறை பிந்திய மழை வீழ்ச்சி காரண மாக பெரும்போக நெற் செய்கை யில் பெரும் வீழ்ச்சி நிலை ஏற்பட் டுள்ளது.

அந்தவகையில் இதுவரை யான காலப்பகுதியில் வவுனியா மாவட் டத்திலுள்ள 9 கமநல அபிவிருத்தி பிரிவுகளினூடாக வும் 10ஆயிரத்து 51 ஏக்கர் வயல்களில் மாத்திரம் நெற் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

அவற்றில் மிகக்குறைவாக உலுக் குளம் பிரிவில் 30 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் அதிகபட்சமாக ஓமந்தை பிரிவில் 2489 ஏக்கர் அளவில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்துக் கான மழை வீழ்ச்சி பிந்தியமை யால் இந்த நிலமை ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுவதுடன், இனி வரும் நாட்களில் மழை வீழ்ச்சிக்கு ஏற்ப 25ஆயி ரத்து 216 ஏக்கர் அள வில் நெற் செய்கை மேற்கொள்ளப் படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்ப தாக மாவட்ட கமநல அபிவிருத் தித் திணைக்களத்தினரால் எதிர் பார்க்கப்படுகின்றது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org